අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
THE OFFICE ON MISSING PERSONS

# பதவி வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பதவிகளுக்காக பொருத்தமான தகைமைகளையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பாதுகாப்புப் பிரிவு தலைவர் (பதவி 01) HM 1-1

## Head of Protection

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய அலுவலகங்களில் உள்ள பாதுகாப்புப் பிரிவுகளைக் கண்காணிக்கின்ற பொறுப்பு வகிப்பவராகவும் சாட்சியாளர்களினதும், பாதிக்கப்பட்டவர்களினதும் உத்தியோகபூர்வ பாதுகாப்பு செயன்முறைகள் நடைமுறைகள் உட்பட அவர்களது பாதுகாப்புக்கான உபாயங்களை விருத்தி செய்பவராகவும் செயற்படுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டம்/ சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்/ அரசியல் விஞ்ஞானம்/ சமூக விஞ்ஞானம் ஆகிய துறையொன்றில் ஆரம்ப இளங்கலைப் பட்டம் **அத்துடன்** குறித்த துறையில்/ மனித உரிமைகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் (முதுமாணி) பட்டம். **அத்துடன்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பிரசித்தமான தனியார் நிறுவனம் ஒன்றில் ‘முகாமைத்துவ மட்டத்தில்’ குறைந்தது 12 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

## பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கல் தலைவர் (பதவி 01) HM 1-1

## Head of Victim and Family Support

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு அலகு மேற்கொள்கின்ற செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய உபாய செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நிபுணர்கள் ஆய்வு செய்வதற்கேற்ற முறைகளை ஒழுங்கமைத்தல், உளவியல்ரீதியான ஆதரவுக்காகவும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற உபாயத் திட்டங்கள் மற்றும் மீளாய்வு சார்ந்த பணிகளை முன்னெடுத்தலும் செயற்படுத்தலும்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட உளவியல்/ உளவளத் துணை மற்றும் உளவியல்/ மெய்யியல் மற்றும் உளவியல்/ சமூக விஞ்ஞானம்/ சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் ஆகிய துறையொன்றில் இளங்கலை பட்டம். **அத்துடன்** குறித்த துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் (முதுமாணி) பட்டம். **அத்துடன்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 12 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

## தடயவியல் பிரிவுத் தலைவர் (பதவி 01) HM 1-1

## Head of Tracing

**பதவியின் விபரம்:** பரிசோதனைகள், தடயவியல் புலனாய்வுகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரவு முகாமை நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்பரீதியான ஆதரவினை வழங்குதல் உட்பட தடயவியல் மற்றும் புலனாய்வு குறித்த அலகினைத் திட்டமிடுவதற்கும் தாபிப்பதற்கும் பொறுப்பு வகித்தல், சம்பந்தப்பட்ட உள்ளக அலகுகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணுதல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட சட்டம்/ குற்றவியல்/ சமூக விஞ்ஞானம் ஆகிய துறையொன்றில் இளங்கலை பட்டம். **அத்துடன்** குறித்த துறையில்/ மனித உரிமைகள் துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் (முதுமாணி) பட்டம். **அத்துடன்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 12 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

## மனிதவள மற்றும் நிருவாக தலைவர் (பதவி 01) HM 1-1

## Human Resources and Head of Administration

**பதவியின் விபரம்:** அலுவலகத்தின் மனிதவள மற்றும் நிருவாகத் துறையைக் கண்காணித்தல், மனிதவள மற்றும் நிருவாக ரீதியான கொள்கைகள், முறைமைகள், செயன்முறைகள் போன்றவற்றைத் தயாரித்தல், நிருவாக நடவடிக்கைகள் மற்றும் மனிதவள நடவடிக்கைகள் சகலதையும் மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட மனிதவள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவம்/ பொது நிருவாகம்/ முகாமைத்துவம் ஆகிய துறையொன்றில் இளங்கலை பட்டம். **அத்துடன்** குறித்த துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் (முதுமாணி) பட்டம் அல்லது பதவியின் விடயப்பரப்புக்கு அவசியமாகக் கொள்ளப்படும் அங்கீககரிக்கப்பட்ட தொழில்முறைப் பட்டயக் கணக்கு நிறுவனம் ஒன்றின் கூட்டு உறுப்பினராக இருத்தல். **அத்துடன்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 13 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய பொருத்தமான கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

## சபைச் செயலர்/ சிரேஸ்ட சட்ட அலுவலர் (பதவி 01) MM 1-1

## Secretary to the Board / Senior Legal Officer

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சபைச் செயலராகப் பணியாற்றுவதற்கான பொறுப்பு வகித்தல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொண்ட சட்டத் துறையில் பட்டம். **அத்துடன்** சத்திய பிரமாணம் செய்த சட்டத்தரணி ஒருவராவும் இருத்தல் வேண்டும். அத்துடன் முதலாவது பட்டப் படிப்பின்/ சத்தியப் பிரமாணத்தின் பின் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375- 15 x 1,910 – 95, 575/-

## சிரேஸ்ட உளச்சமூக அலுவலர் (பதவி 01) MM 1-1

## Senior Psychosocial Officer

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்களின் குடும்ப உறுப்பினர்களதும் காணாமல் போன ஆட்கள் பற்றிய விவகாரங்களில் ஈடுபடுகின்றவர்களினதும் உளவியல் தேவைகளைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படும் உபாயங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு அலுவலகத்துக்கு அவசியப்படுகின்ற ஆதரவினை வழங்குதல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொண்ட உளவியல்/ உளவளத்துணை உளவியல்/ சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளுடன் தொடர்பான பட்டம். **அத்துடன்** முதலாவது பட்டப் படிப்பின் பின்னர் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-

## சிரேஸ்ட பாதுகாப்பு அலுவலர் (பதவி 02) MM 1-1

## Senior Protection Officer

**பதவியின் விபரம்:** பாதிக்கப்பட்டவர்கள், சாட்சியாளர்கள், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஊழியர்கள் ஆகியோருக்கான பாதுகாப்புக்காக பாதுகாப்புப் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற ஒழுங்குமுறைத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் உட்பட பிரிவின் கருமங்களை ஆற்றுவதற்கு பிரிவுத் தலைவருக்குத் துணைபுரிதல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட மனித உரிமைகள்/ சட்டம்/ சமூக விஞ்ஞானம்/ உளவியல்/ உளவளத்துணை உளவியல் ஆகிய துறைகளுள் ஒன்றில் பட்டம். **அத்துடன்** முதலாவது பட்டப் படிப்பின் பின் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-

## சிரேஸ்ட தரவுப் பகுப்பாய்வாளர் (பதவி 01) MM 1-1

## Senior Data Analyst

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தரவு முகாமைத்துவப் பிரிவின் திறமையான செயற்பாட்டையும் புள்ளி விபரங்களின் நிலையையும் முன்னேற்றுகின்ற தரவு சேகரிப்பு முறைமைகள், தரவுப் பகுப்பாய்வு மற்றும் ஏனைய உபாயங்கள் போன்றவற்றை விருத்திசெய்தலும் பராமரித்தலும்

**தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம்/ கணிணி விஞ்ஞானம்/ கணிதம்/ புள்ளி விபரவியல் ஆகிய துறைகளுள் ஒன்றில் பட்டம். **அத்துடன்** முதலாவது பட்டப் படிப்பின் பின் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட பட்டப்பின் அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்பயிற்சித் தகைமை (NVQ 7) மட்டத்திலும் குறையாத தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறை சார்ந்த தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல். **அத்துடன்** அரச அல்லது அரை அரச நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது ஒரு வருடம் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-

## சிரேஸ்ட புலனாய்வு அலுவலர் (பதவி 02) MM 1-1

## Senior Investigation Officer

**பதவியின் விபரம்:** தடயவியல் மற்றும் புலனாய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற கருமங்களான காணாமல் போன ஆட்களைத் தேடுவது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குத் துணைபுரிதல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டம்/ வரலாறு/ அரசியல் விஞ்ஞானம்/ மானுடவியல்/ குற்றவியல் ஆகிய துறைகளுள் ஒன்றில் பட்டம். **அத்துடன்** முதலாவது பட்டப் படிப்பின் பின்னர் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட பட்டப்பின் அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-

## உள்ளகக் கணக்காய்வாளர் (பதவி 01) MM 1-1

## Internal Auditor

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினதும் அதன் பிராந்திய அலுவலகங்களினதும் நிதிசார் பதிவுகளைப் பரிசீலனை செய்தல் மற்றும் அவற்றின் கருமங்கள் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை விதிகளுக்கு இயைபாக இடம்பெறுகின்றனவா என்பவற்றை உறுதிப்படுத்துதல், அவற்றை அறிக்கை இடுதல், நிதிசார் முகாமைத்துவத் துறையைப் பராமரிப்பதற்குத் தேவையான செயன்முறைகளை அறிமுகப்படுத்துதலும் அவற்றைப் பராமரித்தலும்

**தகைமைகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட கணக்கியல்/ நிதியியல்/ வர்த்தகம்/ ஆகிய துறைகளுள் ஒன்றில் இளங்கலை பட்டம். **அத்துடன்** முதலாவது பட்டப் படிப்பின் பின்னர் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட பட்டப்பின் அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறைப் பட்டயக் கணக்கு நிறுவனம் (CIMA/ACCA/ICA) ஒன்றினால் நடத்தப்பட்ட இடைநிலைத் தேர்வில் சித்தி அடைந்திருத்தல் அல்லது CMA துறையில் பூரண தகைமையைப் பெற்றிருத்தல். **அத்துடன்** பதவிக்கான குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால பட்டப்பின் அனுபவத்தையும் கொண்டிருத்தல்,

**அல்லது**

3. கணக்கியல் துறையில் உயர் தேசிய டிப்புளோமா (HNDA) பெற்றிருத்தல். **அத்துடன்** பதவிக்கான குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால பட்டப்பின் அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-

குறிப்பு: ஏற்கனவே அரச நிறுவனம் ஒன்றில்/ இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்ற மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களும் மாறிமாறிப் பணியாற்றத்தக்க வகையில் கருத்திற்கொள்ளப்படுவர்.

## சட்ட அலுவலர் (பதவி 04) JM 1-1

## Legal Officer

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சட்டரீதியான, கொள்கை ரீதியான மற்றும் ஆய்வு சம்பந்தப்பட்ட தலையீடுகள் குறித்த அவசியப்படுகின்ற உபாயங்களை வகுப்பதில் தலைமையையும் வழிகாட்டலையும் வழங்குவதற்கு சட்ட, கொள்கை, மற்றும் ஆய்வுத் துறைத் தலைவருக்குத் துணைபுரிதல் மற்றும் அத்தகைய கருமங்களை ஆற்றுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொண்ட சட்டத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட LL.B பட்டத்துடன், சட்டத்தரணியாகவும் இருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/-

## ஆராய்ச்சி அலுவலர் (பதவி 02) JM 1-1

## Research Officer

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆய்வுப் பிரிவின் பணிகளுக்குத் துணைபுரிதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டம்/ சமூக விஞ்ஞானம்/ குற்றவியல் ஆகிய துறை ஒன்றில் பட்டம்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/-

குறிப்பு: ஏற்கனவே அரச நிறுவனம் ஒன்றில்/ பகுதியளவிலான அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்ற மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களும் ஒருமித்ததாகப் பணியாற்றத்தக்க வகையில் கருத்திற்கொள்ளப்படுவர்.

## புலனாய்வு அலுவலர் (பதவி 05) JM 1-1

## Investigation Officer

**பதவியின் விபரம்:** புலனாய்வுகள், விசாரணைகள், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களைக் கண்டறிதல் ஆகிய விடயங்களுடன் தொடர்புடைய காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட பிரிவின் பணிகளுக்குத் துணைபுரிதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டம்/ வரலாறு/ அரசியல் விஞ்ஞானம்/ மானுடவியல்/ குற்றவியல்/ சமூக விஞ்ஞானம் ஆகிய துறை ஒன்றில் பட்டம்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/-

## பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு அலுவலர் (பதவி 06) JM 1-1

## Victim and Family Support Officer

**பதவியின் விபரம்:** பால்நிலையை மையப்படுத்திய சூழல் ஒன்றை வலுப்படுத்தி அதனைப் பேணிக்காப்பது உட்பட காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களுக்கு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற அனைத்து விதமான ஆதரவுகளும் சேவைகளும் பாதிக்கப்பட்டோரை மையப்படுத்திய அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவுப் பிரிவு முன்னெடுக்கின்ற கருமங்களை ஆற்றுவதற்குப் பொறுப்பு வகித்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட மனித உரிமைகள்/ உளவியல்/ உளவளத்துணை & உளவியல்/ சமூக விஞ்ஞானம் ஆகிய துறை ஒன்றில் பட்டம்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/-

## தவிசாளரின் / நிறைவேற்றுப் பணிப்பாளரின் உதவியாளர் (பதவி 01)MA 1-1
## Personal Assistant to Chairperson/ Executive Director

**பதவியின் விபரம்:** அனைத்து அலுவலக கருமங்களையும் ஆற்றுவதற்கான உதவிகளைத் தவிசாளருக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் வழங்குதல்

**தகைமைகள்:**

அ) க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

i) சிங்களம்/ தமிழ்

ii) ஆங்கில மொழி

iii) கணிதம்

ஆ) க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது உளச்சார்பு வினாத்தாள் தவிர்ந்த) ஏனைய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

இ) மனிதவள முகாமைத்துவம்/ அலுவலகவியல்/ நிருவாகவியல் கற்கைளில் டிப்புளோமா பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.27,910 – 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 - 48,540/-

குறிப்பு: ஏற்கனவே அரச நிறுவனம் ஒன்றில்/ பகுதியளவிலான அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்ற மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களும் ஒருமித்ததாகப் பணியாற்றத்தக்க வகையில் கருத்திற்கொள்ளப்படுவர்.

**மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பதவிகளுக்குமான பொதுவான விடயங்கள்:**

- அனைத்து விண்ணப்பதாரிகளும்,
  - ✓ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- கணினி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- எங்களால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினையே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- தற்போது வரையில் அரச சேவையில் அல்லது பகுதியளவான அரச சேவையில் பணி புரிபவராயின் உரிய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் தலைவரினூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குள் விண்ணப்பதாரிகளினால் அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரிகளினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நேர்முக சபையினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்
- இந்த பதவியானது நிரந்தரமாவதுடன், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியமும் உரித்துடையதாகும்.
- விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் **2023 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதிக்கு** முன்னர் **நிறைவேற்றுப் பணிப்பாளர், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல.40, 03 ஆவது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய** என்ன முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



**சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த**
தவிசாளர்
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்